

# NDIS திட்டத்தை அணுகுவதிலும் அதைப் பற்றி விளங்கிக்கொள்வதிலும் உங்களுக்கு உதவி தேவையா?

‘SSI சேவை உள்ளூர்ப் பகுதி ஒருங்கிணைப்பு’

ndis

SSI settlementservices international

Delivering the NDIS in your community

## Need help accessing and understanding the NDIS?

SSI Local Area Coordination

Tamil

# உங்களுக்கு உதவவே நாங்கள் இருக்கிறோம்

நியூ ஸவுத் வேல்ஸ் மாநிலத்தில் ‘உள்ளூர்ப் பகுதி ஒருங்கிணைப்பு சேவைக’ளை வழங்குவதற்காக ‘சர்வதேச குடியமரல் சேவைகள்’ (SSI) அமைப்பானது National Disability Insurance Agency (‘தேசிய உடலியாமைக் காப்பீட்டு முகமை’(NDIA))-யுடன் கூட்டாய்ப் பணியாற்றிவருகிறது.

‘உள்ளூர்ப் பகுதி சேவை-ஒருங்கிணைப்பாளர்’ (Local Area Coordinator (LAC)) என்ற வகையில், SSI அமைப்பானது National Disability Insurance Scheme (‘தேசிய உடல்-இயலாமைக் காப்பீட்டுத் திட்ட’ (NDIS)) சேவைகளை மட்டுமல்லாமல் சமூகத்தில் கிடைக்கும் மற்ற சேவைகளையும் பெற 7 முதல் 64 வயது வரை உள்ளவர்களுக்கு உதவுகிறது.

## நாங்கள் சேவை வழங்கும் பகுதிகளாவன:

பின்வரும் உள்ளூராட்சிப் பகுதிகள் உள்ளடங்க, ஸிட்னி-யிலும், தென்-மேற்கு ஸிட்னி-யிலும் வசிப்பவர்களுக்கு SSI அமைப்பானது ‘உள்ளூர்ப் பகுதி ஒருங்கிணைப்பு’ சேவைகளை வழங்குகிறது:


### ஸிட்னி

- Ashfield
- Canada Bay
- Leichhardt
- Marrickville
- Strathfield
- Sydney

### தென்-மேற்கு ஸிட்னி

- Bankstown
- Camden
- Campbelltown
- Canterbury
- Fairfield
- Liverpool
- Wingecarribee
- Wollondilly

# நாங்கள் செய்வது:




NDIS திட்ட ஆதரவுதவி சேவைக்கு நீங்கள் தகுதி பெறுகிறீர்களா என்பதைத் தெரிந்துகொள்ளச் செல்க:
www.ndis.gov.au/applying-access-ndis/am-i-eligible

## NDIS திட்ட ஆதரவுதவி சேவைக்கு நீங்கள் தகுதி பெற்றாலும் அல்லது பெறாவிட்டாலும், SSI LACs (‘SSI உள்ளூர்ப் பகுதி ஒருங்கிணைப்பாளர்கள்’) பின் வரும் விடயங்களில் உங்களுக்கு உதவுவார்கள்:

NDIS திட்டத்தினைப் பற்றி விளங்கிக்கொண்டு அந்த சேவையினை அணுகிப் பெறல், மற்றும் தன்னம்பிக்கையோடு அந்தத் திட்டத்தினூடாகப் பயணித்தல்

உங்களுடைய சமூக்கத்திலுள்ள உள்ளூர்ப் பகுதி ஆதரவுதவி சேவை வழங்குநர்களுடன் உங்களைத் தொடர்புபடுத்தல்

கல்வி, சுகாதாரம் மற்றும் போக்குவரத்து போன்ற மற்ற அரச சேவைகளுடன் NDIS திட்டம் எவ்வாறு இணைவாய்ப் பணியாற்றுகிறது என்பதை நீங்கள் விளங்கிக்கொள்ளல்

உங்களுடைய உள்ளூர் சமூகத்திலிருந்து உங்களுக்குத் தேவைப்படும் ஆதரவுதவிகளை நீங்கள் கண்டறிதல்

# எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

உங்களுக்குக் கேள்விகள் ஏதும் உள்ளனவா, அல்லது பின்னூட்டல் எதனையும் நீங்கள் எமக்கு அளிக்க விரும்புகிறீர்களா? உங்களுக்கு உதவ எமது ‘உள்-வாங்கு அணி’ (intake team)-யினர் உள்ளனர்.

இத் திட்டத்தில் புதிதாகப் பங்குபற்றுபவர்கள் மற்றும் ஏற்கனவே இத் திட்டத்தில் பங்குபற்றிவரும் அனைவருக்கும் SSI LAC ‘உள்-வாங்கு’ அணியே அவர்கள் தொடர்புகொள்ள வேண்டிய முதல் இடமாகும். பங்குபற்றுநர்களது கேள்விகளுக்கு திறமையாகவும், செயலூக்கமான முறையிலும் பதிலளிப்பதற்கென எமது விபரம் தெரிந்த ‘உள்வாங்கு-அலுவலர்கள்’ உள்ளனர், மற்றும் NDIS திட்டத்தினைப் பற்றித் தாம் பெற்றுள்ள அறிவையும், தகவல்களையும் தம்மை அழைப்பவர்களுக்கு அளித்து அவர்கள் உதவுவார்கள். எமது சேவையைப் பற்றிய எவ்வொரு கருத்தூட்டல் சம்பந்தமாகவும் எமது அணியினர் உதவுவார்கள்.

## பின் வரும் வழிகளில் நீங்கள் எமது உள்-வாங்கு அலுவலர்களில் ஒருவருடன் பேசலாம்:

**1800 960 975** -ஐ அழையுங்கள்
திங்கள் முதல் வெள்ளி வரை – காலை 10 மணியில் இருந்து மாலை 4 மணி வரை

**அல்லது**

பொதுவான விசாரிப்புகளுக்கு **lac@ssi.org.au** எனும் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்

பின்னூட்டல்கள் எதனையும் சமர்ப்பிக்க **lacfeedback@ssi.org.au** எனும் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்

SSI அமைப்பினது ‘உள்ளூர்ப் பகுதி ஒருங்கிணைப்பு சேவைக’ளைப் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு செல்க:
**www.ssi.org.au/services/local-area-coordination**

# SSI சேவையைப் பற்றி

SSI சேவை என்பது, புதிதாக வருபவர்களும், இதர ஆஸ்திரேலியர்களும் அவர்களது முழுத் திறன்களை அடைய ஆதரவுதவி அளிக்கும் ஒரு சமூக அமைப்பாகும். அகதிகள், அடைக்கலம் நாடிக்கொண்டிருப்பவர்கள் மற்றும் கலாசார மற்றும் மொழி ரீதியாகப் பரந்துபட்ட (CALD) சமூகத்தினர் உள்ளடங்க, பாதிப்பு அடையும் நிலையில் இருந்துள்ள அனைவருடனும் நாங்கள் இணைவாய்ப் பணியாற்றி, திறன்களைக் கட்டியெழுப்பவும், சமத்துவமற்ற நிலையை வெல்லவும் அவர்களுக்கு உதவுகிறோம்.

‘Ability Links’ மற்றும் ‘IgniteAbility® Small Business Start-ups’ (‘குறு வர்த்தகத் துவக்கங்கள்’)) போன்ற சமூகத்தினை அடிப்படையாகக் கொண்ட முன்னெடுப்புகளின் ஊடாக இயலாமை உள்ளவர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தினருக்கும், பராமரிப்பாளர்களுக்கும் SSI அமைப்பானது 2014-ஆம் ஆண்டிலிருந்து ஆதரவுதவி சேவைகளை அளித்து வந்திருக்கிறது. எமது பணியாளர்கள் மற்றும் திட்டப்-பங்குபற்றுநர்களது சிறப்புத்திறன் மற்றும் உள்ளூர் சமூகங்களுடன் அவர்களுக்குள்ள தொடர்புகள் ஆகியவற்றின் ஊடாக NSW மாநிலமெங்கும் சேவைகளை வழங்குவதைப் பற்றிய விரிவான அனுபவ-அறிவை நாங்கள் பெற்றுள்ளோம்.

வெவ்வேறான 90 மொழிகளைப் பேசும் எமது பணியாளர்-அணியிலுள்ள பெரும்பாலானோர் இரு-மொழி பேசுபவர்கள் மற்றும் வேறு கலாசார மக்களுடன் இணைவாய்ச் செயல்படுபவர்கள். தனி-நபர்களும், குடும்பங்களும் அவர்களது ஆற்றல்களைப் பயன்படுத்திக்கொள்ளவும், அவர்களுக்கான முந்துரிமைகளை அவர்கள் அடையாளம் காணவும், அவர்களது தற்போதைய மற்றும் எதிர்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் ஏற்ற வகையில் எமது சேவைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

ஆபொரிஜினிப் பூர்வகுடியினர் மற்றும் டோரிஸ் நீரிணைத் தீவக மக்கள், கலாசார மற்றும் மொழிரீதியாகப் பரந்துபட்டவர்கள் மற்றும் LGBTQIA+ பின்புலங்களைச் சேர்ந்தவர்கள் ஆகிய அனைத்து பரந்துபட்ட சமூகத்தினருடனும் நாங்கள் தோளோடு தோள் கொடுத்துப் பணியாற்றி வருகிறோம்.

**ssi.org.au**

PLAC.BR.03 Need help accessing NDIS_V1